## வந்தவாசி நகராட்சி

### அவசரக்கூட்டம் எண். 4, 2025 - 2026

28-11-2025 தேதியன்று வெள்ளிக் கிழமை மாலை 4. 15 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### மன்றப்பொருள்

**66.** வந்தவாசி நகராட்சி - பொதுசுகாதார பணியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் (Out Sourching) மூலம் பணிபுரியும் பணியாட்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் துவங்கப்படுவதால், அதற்குண்டான பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், வேலூர்-12 அவர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டது, இந்நகராட்சியில் வெளி கொணர்வு முகமை மூலம் 106 நபர்கள் உள்ளனர். இவர்களுக்கு காலை மட்டும் மூன்று வருடத்திற்கு உணவு வழங்கிட தோராய செலவீன தொகை ரூ.66.00/- (ரூபாய் அறுபத்தி ஆறு இலட்சம்) ஆகும். பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1593/2025/இ1 **(தீர்மானம் எண்.66 - மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.)**

**67.** வந்தவாசி நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் ஏற்படுத்த மதிப்பீடு தொகை ரூ.15.84 இலட்சம் ஒப்பந்தப்புள்ளி 21.11.2025 அன்று கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில்.

1. M/S. Sathvik Industries - 0% மதிப்பீட்டிற்கு சமம்
2. M/S. N.Natarajan, Kanchipuram - 15/38 % மதிப்பீட்டைவிட அதிகம்

குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S. Sathvik Industries அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1593/2025/இ1 **(தீர்மானம் எண்.67 - மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.)**

**68.** வந்தவாசி நகராட்சி (பொது நிதி 2025 -2026 ம் ஆண்டிற்கான) எல்லைக்குட்பட்ட சாலைகளில் பள்ளங்கள் (POTHOLES) பழுது பார்ப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ.1.10/- (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2254/2025/இ1 **(தீர்மானம் எண்.68 - மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.)**

69. வந்தவாசி நகராட்சி 19.11.2025-ந்தேதியன்று நடைபெற்ற ஒப்பந்த புள்ளியில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம்

| வ. எ ண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகைரூ. இலட்சத்தில் | மதிப்பீட்டைவிட % குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட சாலையின் POTHOLES) பழுது பார்த்தல் பணி. | திரு.வி.சேகர் | 1.10 | 12.94% குறைவு |
| | | திருமதி. பா.தில்ஷாத் | | 0.12% குறைவு |
| | | திருமதி. த.தேவகுமாரி | | 14.86% அதிகம் |

குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வி.சேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மேற்கொள்ளவும், அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் இணையவழியில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகை செலுத்தப்பட்டது. (வி.சேகர்) மற்ற ஒப்பந்தப்புள்ளியில் வைப்புதொகை செலுத்தப்படவில்லை மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.2254/2025/இ1 (தீர்மானம் எண்.69. ஒப்பந்தப்புள்ளி ஒருவர் மட்டும் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளதால், இந்த ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து, மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது)

H. [signature] 28/11-2025

நகரமன்ற தலைவர்,

வந்தவாசி நகராட்சி.